**அ.வ.எண். 195/2023**
**வா.சா.1 : கந்தசாமி**
**தேதி : 02.04.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

03.03.2023 ஆம் தேதியன்று வாதி பரமசிவம் 1ம் பிரதிவாதி சத்தியமூர்த்தியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. அதற்கு நானும் தனலட்சுமியும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துள்ளோம். கிரையத்தொகை மொத்தம் ரூ.30,78,575/- ஆகும். அதற்கு முன்தொகையாக ரூ.25,78,575 ஆகும். வா.சா.ஆ.4 கிரைய ஒப்பந்தத்தின் காலம் 3 மாதங்கள் ஆகும். வழக்கறிஞர் நகுல்சாமி அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்யப்பட்டது. நான், நகுல்சாமி, தனலட்சுமி, வாதி, பிரதிவாதிகள் ஆகியோர் அங்கு இருந்தார்கள். வா.சா.ஆ.4 கிரைய ஒப்பந்ததை வழக்கறிஞர் நகுல்சாமி தயார் செய்தார். வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.4 ஆவணத்தில் சாட்சி தனலட்சுமி கையொப்பம் செய்யும்போது நான் அதனைப்பார்த்தேன். வாதி எனக்கு உறவுக்காரர் அல்ல எனது பக்கத்து வீட்டுக்காரர்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.04.02 18:57:48 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.